அ.வ.எண்: 49/2023 நாள்: 13.07.2026

வா.சா.1 –பழனிச்சாமி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எந்த ஊரில் படித்தேன் என்றால் சிறுவனூர் அருகில் உள்ள கரூர் என்ற கிராமத்தில் படித்தேன். மேற்படி கிராமத்தில் எங்கு தங்கி படித்தேன் என்றால் சிறுவனூரில் என் வீட்டிலேயே தங்கி தான் படித்தேன். எனது பள்ளியில் கல்வி சான்றிதழ் வழங்கினார்கள் என்றால் சரிதான். அந்த சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ராமநாதன் எனக்கு என்ன உறவு முறை வேண்டும் என்றால் எனது அப்பா ஆவார். அவர் எப்பொழுது இறந்தார் என்றால் 2016–ஆம் ஆண்டு இறந்தார். எனது தந்தைக்கு ஏற்கனவே திருமணம் ஆன விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவரது மனைவியின் பெயர் சொர்ணம் அம்மாள் ஆகும்.

2. எனது தந்தை ராமநாதன் எந்த ஊரில் பிறந்தார் என்றால்,

சிறுவனூரில் தான் பிறந்தார். மேற்படி ராமநாதனின் பெற்றோர் பெயர் என்ன என்றால் கருப்பையா மற்றும் அம்மாகுட்டி ஆகும். மேற்படி கருப்பையா – அம்மாகுட்டி தம்பதியினருக்கு எத்தனை மக்கள் என்றால், 4 பெண் மக்கள் 3 ஆண் மக்கள் ஆவர். சித்திரைவேலு, சண்முகவேலு, பொன்னாத்தாள், பஞ்சவர்ணம், மற்றவர்கள் பெயர் தெரியாது. மேற்படி விவரங்களை எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. சிறுவனூரில் நான் வசித்து வரும் வீடு சொந்த வீடா அல்லது வாடகை வீடா என்றால் சொந்த வீடு ஆகும். மேற்படி வீட்டை யார் கட்டியது என்றால் நான் தான் கட்டினேன். அதற்கான வீட்டு வரி ரசீதுகள் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது.

3. நான் எப்பொழுது மேற்படி வீட்டை கட்டினேன் என்றால் 2007 ஆம் ஆண்டு கட்டினேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் 5 நபர்கள். அதில் ஒருவர் இறந்துவிட்டார். பழனிச்சாமி(நான்), இந்திரா, முத்துலட்சுமி, செந்தில் ராமு, கருப்பையா ஆவோம். அதில் கருப்பையா இறந்துவிட்டார். கருப்பையாவிற்கு திருமணம் ஆகவில்லை. எனது தாயாரான ஜெயாவுக்கு எனது தந்தையுடன் எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் வருடம் எனக்கு நினைவில் இல்லை. மேற்படி திருமணம் யார் முன்னிலையில் நடைபெற்றது என்றால் அது

பற்றி எனக்கு தெரியாது, எனது பெரியம்மா சொர்ணம்அம்மாள் தான் எனக்கு திருமணம் பற்றி கூறியுள்ளார்.

4. முதல் மனைவி உயிருடன் இருக்கும் பொழுதே இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டால் அந்த திருமணம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல, சம்மதத்துடன் தான் திருமணம் செய்து கொண்டனர். முதல் மனைவியுடன் விவாகரத்து பெறாமல் இரண்டாவதாக திருமணம் செய்து கொள்வது சட்டப்படி சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. சொர்ணம் அம்மாள் மற்றும் ராமநாதன் ஆகியோர் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்தார்களா என்றால் இல்லை, ஒன்றாக தான் வாழ்ந்தார்கள். எனது தந்தையின் உடன்பிறந்த சகோதர சகோதரிகள் குறித்து எனது வழக்குரையிலும் எனது நிரூபண வாக்குமூலத்திலும் நான் கூறவில்லை என்றால் சரிதான்.

5. இறந்து போன இராமநாதனின் தந்தையை பெற்ற தந்தை குறித்து எனக்கு தெரியுமா என்றால் அவரைப் பற்றி எனக்கு தெரியாது. இதனால் தான் தாவா வழக்கில் ராமநாதன் என்பவரின் வம்சாவழி ஜாபிதாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன எனது தாயார் ஜெயாவின் குடும்ப அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஜெயா என்பவர் 1983 ஆம் ஆண்டு இறந்து

விட்டார் என்றால் சரிதான். எதனால் இத்தனை ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தாயார் இறக்கும்பொழுது அதை பற்றி விவரம் எனக்கு தெரியவில்லை, எனது தந்தை இறந்த பிறகு தான் வாரிசு சான்றிதழ் பெற வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரிய வந்தது.

6. ராமநாதன் 2016 ஆம் ஆண்டு இறந்த பின்பு எவ்வளவு காலம் கழித்து இறப்பு சான்றிதழ் பெற்றோம் என்றால், 6 மாத காலத்திற்குள் இறப்பு சான்றிதழ் பெற்று விட்டோம். வா.சா.ஆ.13 ஆன ராமநாதனின் இறப்புச் சான்றிதழ் அசலை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, அசலை தாக்கல் செய்தோம். நான் அசலை தாக்கல் செய்யவில்லை என்றும், ஒளிநகலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. ராமநாதன் இறப்புச் சான்றிதழின் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் தான் நான் கேட்டுள்ள பரிகாரம் வழங்க முடியும் என்று சொன்னால் சரிதான். அதேபோல எனது சகோதரரான கருப்பையாவின் இறப்பு சான்றிதழையும், நான் ஒளிநகல் தான் தாக்கல் செய்து உள்ளேன் என்றும், அசலை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

7. எனக்கு தற்போது 49 வயதாகிறது. எனது சகோதர சகோதரிகளின் திருமண பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது குடும்பத்தில் நடந்த விசேஷங்களின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இறந்து போன ராமநாதன் சொத்துக்கள், அவரது சுய சம்பாத்திய சொத்துக்களா அல்லது பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்களா என்றால் எனக்கு தெரிந்தவரையில் அவரது பெயரில் தான் இருந்தது. மேற்படி இராமநாதனின் சொத்துக்கள் அனைத்தும் அவருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதர சகோதரிகள் என்ன படித்துள்ளார்கள் என்றால் ஏழாவது அல்லது எட்டாவது வரை படித்துள்ளார்கள் அதற்கு மேல் அவர்கள் படிக்கவில்லை.

8. எனது சகோதர சகோதரிகளின் பள்ளிக்கல்வி சான்றுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் எனது சகோதர சகோதரிகளை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். இறந்து போன ராமநாதனின் சட்ட வாரிசுகள் மற்றும் உடன்பிறந்த சகோதர சகோதரிகளின் விபரங்களை இந்த வழக்கில் குறிப்பிடாததால், இந்த வழக்கு சட்ட குறைபாடு உள்ள வழக்கு என்று சொன்னால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்த பின்பு தான் எனது

தந்தையின் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் பற்றி விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு விவரம் தெரிந்த காலம் முதலே தெரியும். இறந்து போன சொர்ணம் அம்மாவின் குடும்ப அட்டையிலும், 1–ம் பிரதிவாதியின் குடும்ப அட்டையிலும் ராமநாதனின் பெயர் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும் எங்கள் குடும்பத்தினர் பெயர் இல்லை என்று சொன்னால் சரிதான்.

9. சொர்ணம் அம்மாவின் ஆதார் அட்டையிலும் கணவரின் பெயர் ராமநாதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொர்ணம் அம்மாள் மற்றும் ராமநாதன் ஆகியோர் கே.சிறுவனூரில் தனியாக வசித்து வந்தனர் என்றால் சரியல்ல, நாங்கள் ஒன்றாக தான் வசித்து வந்தோம். நாங்கள் கூட்டாக வசித்து வந்தோம் என்பதற்கான ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. இறந்து போன சொர்ணம் அம்மாவின் குடும்ப அட்டையிலும் ராமநாதனின் பெயர் மட்டும்தான் உள்ளது என்றும், மற்றவர்களின் பெயர் வரவில்லை என்றும் சொன்னால் ஒரே நபர்களின் பெயர் இரண்டு குடும்ப அட்டையில் வரக்கூடாது என்பதற்காக தனித்தனி குடும்ப அட்டை வழங்கினர், ஆனால் ஒன்றாக தான் வசித்தோம்.

10. நான் சொல்வது போல் இறந்து போன ராமநாதன் என்பவருக்கு ஜெயா என்பவர் உடன் திருமணம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் எந்த ஊரில் பிறந்தார் என்றால்

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை தாலுகாவில் உள்ள கிடங்கூர் என்ற கிராமத்தில் பிறந்தார். எனது தாயார் என்ன படித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் உடன்பிறந்தவர்கள் தற்போது எங்கு உள்ளனர் என்றால் அதைப் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. எனது தாயார் எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்றால் செட்டியார் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இறந்து போன ராமநாதன் என்பவருக்கு ராஜகுமாரி என்ற ராஜேஸ்வரி என்பவர் மட்டும் தான் ஒரே வாரிசு என்று சொன்னால் சரியல்ல. ராமநாதன் உயிருடன் இருக்கும் காலத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் கூட்டுப்பாத்தியப்பட்ட சொத்துக்களாக இருந்ததா என்றால் எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் அவரது பெயரில் தான் சொத்துக்கள் இருந்தது.

11. வருவாய்த்துறை ஆவணங்களில் பட்டா எண்.113 ஆனது கருப்பையா மக்கள் ராமநாதன் மற்றும் சித்திரவேலு பெயரில் கூட்டாக உள்ளது என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனாரின் சொத்துக்களை நான் அனுபவம் செய்தேனா என்றால் விவசாயம் செய்தேன். நான் விவசாயம் செய்த இடங்களுக்கான சர்வே எண் மற்றும் பட்டா எண் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எத்தனை ஆண்டுகளாக வேலை செய்து வருகிறேன் என்றால், சுமார் 20 வயது முதல் வேலை செய்து வருகிறேன்.

எனக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் 2006 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. ராமநாதன் சொர்ணம் அம்மாளை மட்டும்தான் திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களுக்கு ராஜகுமாரி என்கிற ராஜேஸ்வரி மட்டுமே சட்ட வாரிசு என்றும், அவர் வேறு ஏதும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும், வாதிகள் அவருக்கு சட்ட வாரிசு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

12. எனது தாயாரின் திருமணத்தின் போது யார் கலந்து கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா வழக்கு குறைபாடு உடைய வழக்கு என்றும், நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன ராமநாதனின் சொத்துக்களை அடைவதற்காகவே இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் இந்த வழக்கை நான் சில நபர்களின் தூண்டுதலின் பெயரில் வஞ்சக கூட்டாக தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜரராகததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R
Digitally signed by PREMI R
Date: 2026.07.13 13:54:48 +0530